**மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், பொழிப்புக்கள் முக்கிய கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம், 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையில் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பிரிவில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டடுள்ளவாறு, நிதி நிலைமை கூற்றில், விரிவான வருமானக் கூற்றில், உரிமை மூலதனங்கள் மாற்றல் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடங்கும் பொருண்மையான உருப்படிகளை மாற்று வழி மூலம் உறுதி செய்ய அல்லது சான்றுறுதியிட என்னால் முடியவில்லை.
இதன் காரணமாக, நிதி நிலைமை கூற்று, விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனங்கள் மாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்களை தயாரிக்கும் பெறுமதி அல்லது உருப்படிகளின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஏதேனும் இணக்கப்பாடு தேவையா என என்னால் நிச்சயிக்க முடியவில்லை.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு, இணங்கியதாக தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கியதாக மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றை வழங்க போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அதவானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| | குறித்த நியமத் தொடர்புடன் கூடிய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 பந்தி பிரகாரம் நியமத்தினால் இடமளிக்கப்பட்டுள்ள சந்தர்பங்களை தவிர சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவின மீதிகளை பதிலீடு செய்து நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கக் கூடாத போதும், சபையின் முல்ஹல்கெளே தோட்டத் தொகுதியின் பணிக்கொடைக் கணக்கில் ரூபா 1,067,176 ஆன ஆரம்ப வரவு மீதியை இனங்காணாது மொத்த செலுத்த வேண்டிய பணிக் கொடை மீதியிலிருந்து கழித்துள்ள காரணத்தால் சபையின் செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதி அப் பெறுமதியால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முல்ஹல்கெளே தோட்டத் தொகுதி தொடர்பாக காணப்படும் ஐந்தொகையில் செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதியாக வரவு பெறுமானமொன்று காண்பிக்கப்படுவதுடன் இந்த மீதி தொடர்பான தகவல்கள் நிறுவனத்திடம் இல்லை. அதன் காரணமாக அந்த மீதியை 2024 ஆண்டின் ஐந்தொகையினுள் வேறாக காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமம் பிரகாரம் மீதிகளை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 06 பந்தி பிரகாரம் சொத்துகளை இனங்காணும் போது அதன் வரைவிலக்கணத்திற்கு உட்படாத விற்பனைக்கு மற்றும் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களிற்காக பயன்படுத்திய இயற்கை பசளை உற்பத்தி செயற்திட்டத்திற்கு | இதனை 2025 ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நியமம் பிரகாரம் சொத்துக்கள் எனும் வரைவிலக்கத்திற்கு உட்படாத செலவினை மூலதனமாக்கக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | உரியதாக மீளாய்வாண்டு இறுதி வரை மேற்கொண்டிருந்த ரூபா 9,922,016 தொகையான மீண்டுவரும் செலவானது நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 15 பந்தி பிரகாரம் 18,716.16 ஹெக்டெயார் காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்து ஆதன பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்காக பாரிய தொகை செலவாவதால் நிகழ்காலத்தில் காணி குத்தகை வழங்கும் வருடாந்த குத்தகை வாடகைக்காக மாத்திரம் பெறுமதி மதிப்பீடு பெறப்படுகின்றது. அதற்காக செலவிடப்படும் செலவினை குத்தகைதாரரிடமிருந்து அறவிட நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக் கொண்ட பின்னர் கணக்குகளிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் காணிகளை பெறுமதி மதிப்பீடு செய்து ஆதன, பொறித்தொகதி மற்றும் உபகரணங்களின் கீழ் இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 பந்தி பிரகாரம் ஆதன பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயட்காலத்தை குறைந்த பட்சம் ஒவ்வொறு நிதியாண்டிலும் மீளாய்வு செய்து மீள் மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், மீளாய்வாண்டு இறுதியில் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வரும் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட பெறுமதி ரூபா 356,099,978 ஆன ஆதன, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கிரயம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த சொத்துக்களின் எஞ்சிய மற்றும் பயனுள்ள ஆயட்காலத்தை மீள் மதிப்பீடு செய்து பெற்றுக் கொள்வதற்காக குழுவொன்றை நியமித்து அக் குழுவிற்கு பெறுமதி மதிப்பீட்டு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக பெறுகைகள் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த பணியை மேற்கொள்வதற்காக போதிய காலமொன்று தேவைப்படுவதுடன், அந்த செயன்முறை இடம்பெற்றதுடன் குறித்த மதிப்பீட்டு பெறுமதிகளை கணக்குகளிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமம் பிரகாரம் ஆதன பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயட்காலத்தை குறைந்த பட்சம் ஒவ்வொறு நிதியாண்டிலும் மீளாய்வு செய்து மீள் மதிப்பீடு செய்ய வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 57 பந்தி பிரகாரம் சேவை நலன் பொறுப்புக்களை கணிப்பிடும் போது இயற்கணிய முறையை பயன்படுத்தாது ஊழியரின் ஆண்டு இறுதியில் பெறும் அடிப்படை சம்பளத்தை மாத்திரம் அடிப்படையாக்க கொண்டு ஊழியர் நலன்கள் கணிப்பிடப்பட்டிருந்தன. | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் பணிக்கொடை கணிப்பீடு செய்தல் ஆரம்பம் முதலே 1983 இன் 12 இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. தோழிலாளர் திணைக்களத்தினால் பணிக்கொடை நிலுவை செலுத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதானது இந்த | கணக்கீட்டு நியமம் பிரகாரம் இயற்கணிய முறை ஊழியர் நலன்கள் கணிப்பிட மிகவும் ஆக்கபூர்வ முறை ஒன்றாகையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சட்டத்தின் பிரகாரம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2024.06.10 திகதி இடம்பெற்ற கணக்காய்வு முகாமைத்துவ கூட்டத்தில் பணிக்கொடை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது சரியென குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் 07 பந்தி பிரகாரம் 123,856.11 ஹெக்டெயார் காணி நியாயமான பெறுமானத்திற்கு மதிப்பீடு செய்து முதலீட்டு ஆதனத்தின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | பிராந்திய தோட்டக் கம்பனிக்கு வழங்கியுள்ள காணி தொடர்பான தகவல்கள் 2023 ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br>ஏனைய தரப்பினரிற்கு குத்தகை வழங்கியுள்ள சபைக்கு சொந்தமான காணிகளின் பெறுமதி இது வரை மதிப்பீடு செய்யப்படாததுடன், அவ்வாறு மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக் கொண்ட பின்னர் கணக்குகளிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமம் பிரகாரம் குத்தகை வழங்கியுள்ள காணி கட்டிடங்கள் முதலீட்டு ஆதனங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 12 மற்றும் 30 பந்தி பிரகாரம் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை நியாயமான பெறுமதியில் அளவிட வேண்டிய போதும், ரூபா 21,938,031 பெறுமதியான நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் நிலையான பெறுமதியாக முன்கொண்டு செல்லப்பட்டுவருகின்றன. மேலும் மீளாய்வாண்டின் போது ரூபா 53,580,028 ஆன உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு வருமானத்திற்கு எடுக்கப்பட்டுள்ள போதும் குறித்த கிரயம் சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது மரங்களின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை வனவள பிரிவிலிருந்து பெறப்பட்டுள்ளதுடன், அந்த வனவள பிரிவினால் வழங்கப்பட்ட மரப் பெறுமதி மற்றும் மரங்களின் அளவுகள் தொடர்பாக குறித்த தோட்டங்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக நிறுவனத்தினுள் நடைமுறை பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதனால் எதிர்காலத்தில் சரியான பெறுமானங்களை புத்தகங்களிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நியமம் பிரகாரம் சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டியதுடன் விற்பனை கிரயத்தை சொத்துக்களில் இருந்து அகற்ற வேண்டும். |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 30 மற்றும் 55 பந்தி பிரகாரம் 1996 ஆண்டு முதல் முதிர்ந்த ஏனைய பயிர்களின் கீழ் காண்பித்திருந்த ரூபா 8,281,946 ஆன உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் (Bearer Plants) பெறுமானத் தேய்விடப்பட்டு இருக்கவில்லை. | 05 பயிர்களிற்கு உரியதாக ரூபா 8,281,946 ஆன உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் மீதிகள் குறித்த தோட்ட அதிகாரிகளிடம் பௌதீக ரீதியாக நிலைத்திருத்தலை உறுதி செய்து கொண்டு முன் நடவடிக்கை எடுத்தல் மற்றும் பெறுமானத் தேய்விட நடவடிக்கை எடுக்கப்படும். | நியமம் பிரகாரம் சொத்துக்களின் நிலைத்திருத்தலை உறுதி செய்து அந்த சொத்துக்களை பெறுமானத் தேய்விட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா சொத்தாக காண்பித்திருந்த ரூபா 283,113 ஆன ஹன்தான தோட்டத்தின் விளையாட்டு மைதானம், டாலி வீதியில் அமைந்துள்ள களஞ்சிய அலுவலகம் மற்றும் நுகர்வுப் பிரிவிற்குரிய ரூபா 288,205 ஆன கட்டிடங்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாது சபை ஆரம்பிக்கப்பட்ட 1972 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | நிறுவனத்தில் தொடர்ந்து நிலவிவரும் செயற்படு மூலதன நெருக்கடி காரணமாக 2002 ஆண்டு முதல் 2023 ஜுன் 30 ஆம் திகதி வரை நியதிச் சட்ட கொடுப்பனவுகள் கூட செலுத்தப்படாத நிலைமையில் நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்ய நிறுவனத்திடம் போதிய நிதி இல்லை. அதனால் இந்த நிலையான சொத்துக்களின் பழைய பெறுமதிகள் அவ்வாறே பத்தகங்களில் நிலவுவதுடன் எதிர்காலத்தில் இந்த கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br>ஹன்தான விளையாட்டு மைதானம் தொடர்பாக இந்த பெறுமானம் 2000 ஆண்டிற்கு முன்னரிலிருந்து கணக்குகளில் நிலவும் பெறுமானங்கள் ஆவதுடன் அந்த பெறுமதிகளை அறிக்கையிட்டதற்கான சான்றுகள் இன்னும் கிடைக்கவில்லை. | சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | காவலாளிற்கு செலுத்தியிருந்த ரூபா 758,608 ஆன சம்பளத்தை மீண்டுவரும் செலவாக கணக்கீடு செய்யாது ஹந்தான தோட்டத்தின் தேயிலை விற்பனை நிலைய கிரயத்திற்கு கணக்கீடு செய்த காரணத்தால் அந்த பெறுமானத்தால் சொத்துக்கள் மிகை கணக்கீடு செய்யப்பட்டு நட்டமும் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2025.10.28 திகதி சரி செய்யப்பட்டுள்ளது. | கணக்கீட்டு தத்துவங்கள் பிரகாம் செலவு மற்றும் சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | செயற்படாத நிலையில் காணப்படும் செயற்திட்டத்திற்காக மேற்கொண்டிருந்த ரூபா 4,248,802 ஆன நிலத்தை தயார்படுத்தும் கிரயத்தை பயிர்கள் செலவாக இலாப நட்டக் கணக்கிற்கு இனங்காணாது நடைமுறை | இந்த செயற்திட்டங்கள் இன்னும் ஆரம்ப கட்டங்களில் காணப்படுவதால், (நில தயார்படுத்தல், குழிகளை வெட்டுதல்) இப் பெறுமானங்கள் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களாக இனங்கண்டு உயிரியல் விஞ்ஞான சொத்துக்களிற்கு மாற்றுதல் | செயற்படாத நிலையில் காணப்படும் செயற்திட்டத்திற்காக மேற்கொண்டு இருந்த செலவுகளை சொத்தாக இனங்காணக் |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகளின் கீழ் கணக்கீடு செய்திருந்ததால் சொத்துக்கள் மிகையாக கணக்கிடப்பட்டு நட்டமும் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | செய்ய முடியாதென. | கூடாது. |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் ரூபா 3,454,475 ஆன கோவிலிற்காக செய்யப்பட்ட அன்பளிப்பு, நடைமுறை வேலை மீதியினுள் உள்ளடக்கிய காரணத்தால் அப் பெறுமானத்தால் சொத்துக்கள் மிகையாக கணக்கிடப்பட்டு நட்டமும் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் இது சரி செய்யப்பட்டுள்ளது. | கணக்கீட்டு தத்துவங்கள் பிரகாம் செலவு மற்றும் சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | சபையின் தலைமை அலுவலக ஆதன பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் காணப்பட்ட கிரயம் ரூபா 32,088,371 ஆன 13 அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள், கணனி உருப்படிகளின் திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 24,340,038 தொகை உருப்படியின் உருப்படிக்கு இனங்காணப்படாது மொத்த பெறுமதியாக காண்பித்திருந்த காரணத்தால் மீளாய்வாண்டு இறுதியில் உருப்படிகளின் தேறிய சொத்துப் பெறுமதி தொடர்பான சரியான உறுதிப்படுத்தலாக இருக்கவில்லை. | 2025 ஆண்டில் இந்த சொத்துக்களை தனியாக இனங்கண்டு உருப்படிகளின் தேறிய சொத்து பெறுமதிகளை தனியாக காண்பிக்க நடடிவக்கை எடுக்கப்படும். | மீதிப் பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள விரிவான அட்டவணைகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஊ) | றஹதுன்கொட தோட்டத் தொகுதியின் Eco Tea Garden எனும் சுற்றுலா விடுதியின் நிர்மாண கிரயம் ரூபா 2,775,742 ஆன போதும், ரூபா 3,644,726 ஆக கணக்கீடு செய்துள்ள காரணத்தால் ரூபா 868,984 இனால் சொத்துக்கள் மிகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | 2025 ஆண்டில் கணக்குகள் ஊடாக சரிசெய்யப்பட்டுள்ளது. | கிரயத்தை அதிகரித்து காண்பித்த காரணத்தை கண்டறிந்து சரி செய்ய வேண்டும். |
| (எ) | மொன்தகிறிஸ்டோ தோட்டத் தொகுதி 2003 ஆண்டு முதல் பல்வேறு தரப்பினரிற்கு குத்தகை வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த தோட்டத் தொகுதியின் ஆதன பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் மற்றும் | இந்த மொன்தகிரிஸ்டோ தோட்டத் தொகுதியின் சொத்துக்களிற்கு உரியதாக ஆவணங்கள் இல்லாததால் இந்த சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்படாததுடன், இது வரை இவற்றின் நிலைத்திருத்தல் தொடர்பாக | சொத்துக்களின் நிலைத்திருத்தலை உறுதி செய்து கொண்டு பெறுமானத் தேய்விடல் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கிரயம் ரூபா 32,168,955 ஆன பெறுமதியொன்று குத்தகை வழங்கிய ஆதனத்தின் கீழ் பல ஆண்டுகளாக முன்கொண்டு செல்லப்படுவதுடன் அதற்குரிய சொத்துக்களின் நிலைத்திருத்தலை உறுதி செய்து பெறுமானத் தேய்விடலை சபையினால் மேற்கொண்டிருக்கவில்லை. | உறுதி செய்து கொள்வது கடினமாகவுள்ளது. | |
| (ஏ) | நாகஸ்தென்ன தோட்டத்தில் பிளான்டஸ் பங்களா (Planters Bungalow) எனும் கட்டிடத்தை வாடகைக்கு வழங்கியதில் மீளாய்வாண்டினுள் உருவான ரூபா 668,328 ஆன தேறிய இலாபம், இலாப நட்டக் கணக்கிற்கு செம்மையாக்கப்படாது நானாவித கடன்படுனர் மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் ஊடாக சரிசெய்யப்பட்டுள்ளது. | கணக்கீட்டு தத்துவங்கள் பிரகாம் இனங்காணும் நட்டங்களை இலாப நட்டக் கணக்கிற்கு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | பெறுந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மூலம் செயற்படுத்தி இருந்த “தோட்ட அபிவிருத்தி செயற்திட்டம்” 2010 ஆண்டில் நிறைவு செய்யப்பட்டிருந்த போதும் அந்த செயற்திட்டத்திற்கு உரியதாக கூரை தகரங்களை கொள்வனவு செய்வதற்காக சபையினால் செலவிடப்பட்ட ரூபா 4,136,733 தொகை சபையின் நிதிக்கூற்றுக்களில் ஏனைய பெறவேண்டிய மீதியாக 13 வருடங்களிற்கு அதிக காலமாக முன்கொண்டு வரப்படுகின்றது. இந்த மீதியை மீள்நிரப்ப வேண்டிய நிறுவனத்தை இனங்கண்டு இருக்காததுடன் அறவீடு நிச்சியமற்ற தன்மை தொடர்பாக எவ்வித நிதி ஏற்பாட்டையும் நிதிக்கூற்றினுள் செய்திருக்கவில்லை. | இந்த செயற்திட்டம் 2010 ஆண்டில் நிறைவடைந்து உள்ளதுடன், பெறுந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் அனுசரனையுடன் காணப்பட்ட இந்த செயற்திட்டத்தை மேற்கொண்ட நிறுவனத்திடம் இருந்து மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு இந்த மீதி அறவிடப்பட வேண்டிய போதும், இந்த நிறுவனமும் தற்போது செயற்படாத நிறுவனமொன்று ஆகையால் இது தொடர்பாக மேலும் விடயங்களை கண்டறிந்த பின்னர் முன்நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கு மேலதிகமாக நிறுவனத்திற்காக அறவிடமுடியா கடன் மற்றும் ஐயக்கடன் கொள்கையொன்றை தயாரிப்பதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுடன் அறவீடு நிச்சயமற்ற தன்மை தொடர்பாக ஐயக்கடன் ஏற்பாடொன்றை மேற்கொள்ள வேண்டும். |
| (ஒ) | ஹந்தான தோட்டத் தொகுதியிற்குரிய 01 ஏக்கர் 1.3 பர்சஸில் அமைந்துள்ள தேயிலை தொழில்சாலை, | இலங்கை தேயிலை சபைக்கு ஹந்தான தேயிலை தொழிற்சாலையை நூதனசாலை ஒன்றை நடாத்திச் செல்ல | உடன்படிக்கை பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய குத்தகை |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் காணி 2001 சனவரி மாதம் 01 திகதி முதல் 30 ஆண்டுகளிற்காக இலங்கை தேயிலை சபைக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தது. ஆரம்பம் முதல் இதுவரை 22 ஆண்டு காலத்தினுள் அறவிட வேண்டிய ரூபா 42,900,000 ஆன குத்தகை வாடகை அறவிடப்பட்டு இருக்காததுடன் அந்த பெறவேண்டிய குத்தகை வாடகையை கணக்கீடு செய்திருக்கவில்லை. அவ்வாறே சபையினால் 2003 மற்றும் 2020 ஆண்டுகளில் தேயிலை சபையிடம் இருந்து பெற்றுக் கொண்ட ரூபா 34,000,000 தொகை கடனை தீர்ப்பதற்காக சபைக்கு இயலாததால் அந்த தொழிற்சாலையை மற்றும் காணியை தேயிலை சபைக்கு ஒப்படைக்க சபையின் 2020 பெப்ரவரி 27 திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் இணங்கியிருந்த போதும், ஆதன ஒப்படைப்பு நடவடிக்கையோ நிலுவை குத்தகை தொகையோ அறவிடப்பட்டிருக்கவில்லை. 2025 ஜுலை 04 திகதி தொழிற்சாலையில் மேற்கொண்ட பௌதீக பரீட்சிப்பின் போது தனியார் நிறுவனமொன்றினால் அந்த தொழிற்சாலையை தேயிலை நூதனசாலை ஒன்றாக நடாத்திச் செல்வதுடன் சபைக்கோ தேயிலை சபைக்கோ எவ்வித நலன்களும் கிடைத்திருக்கவில்லை. | குத்தகை அடிப்படையில் வழங்க 2001 மே மாதம் 21 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதுடன், குத்தகை காலம் 2001 சனவரி 1 ஆம் திகதி முதல் 2030 திசெம்பர் 31 திகதி வரை நடைமுறையாகும். ஆரம்ப காலத்தில் காசு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட்டதன் மீது இந்த உடன்படிக்கைக்கு உரியதாக கடன்படுனர் மீதி தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. வருடாந்த குத்தகை வாடகை ரூபா 150,000 தொகையாவதுடன் அதன் பிரகாரம் தேயிலை சபையினால் 2001 ஆண்டு முதல் 03 ஆண்டு குத்தகை தொகையை செலுத்தியதுடன், பின்னர் ஜனவசம இனால் 2003 ஆண்டில் தேயிலை சபையிடமிருந்து ரூபா 25 மில்லியன் மற்றும் 2020 ஆண்டில் ரூபா 10 மில்லின் கடன் தொகையை பெற்றுக் கொண்டு அவற்றிலிருந்து ரூபா 01 மில்லியனை 2021 ஆண்டில் செலுத்தியுள்ளது. பின்னர் தேயிலை சபையினால் குத்தகை தொகை செலுத்துவதனை நிறுத்தியுள்ளதுடன், அத் தொகையின் மீது இந்த தேயிலை தொழிற்சாலையை தேயிலை சபைக்கு சுவீகரிக்க கோரப்பட்டுள்ளது. 2024 கணக்குகள் மூலம் இதனை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | தொகையை தீர்த்துக் கொள்ள மற்றும் தேயிலை சபைக்கு செலுத்த வேண்டிய மீதியை தீர்த்துக் கொள்ள நடபவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டு இறுதியில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவையினுள் உள்ளடங்கும் ரூபா 1,863,756 ஆன பழைய தொங்கல் கணக்கு மீதிக்குரிய கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தின் தொங்கல் கணக்கில் ரூபா 1,863,756 ஆன மீதி 1996 ஆண்டிற்கு முன்னரில் இருந்து நிலவி வரும் மீதியாவதுடன், இது தொடர்பான தகவல்களை கண்டறிய முடியவில்லை. இது தொடர்பான தகவல்கள் கண்டறிய நிறுவனத்தினுள் இல்லாததால் புத்தகங்களில் இருந்து பதிவழிக்க முடியாதுள்ளது. | தொங்கல் கணக்கு மீதிகளை தீர்த்துக் கொள்ள தேவையான தகவல்கள் இல்லை எனில் கணக்கு மீதிக்காக இலாப நட்டக் கணக்கில் நிதிஏற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | சபையின் உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் தொடர்பாக Bearer Plants இல் முதிர்ச்சியடையாத இறப்பர் பயிர்களிற்காக 2003 – 2014 காலத்தினுள் செலவிட்டிருந்த பெறுமதி ரூபா 41,998,357 தொகை 7 ஆண்டு காலத்தின் பின்னர் முதிர்ந்த இறப்பர் பயிர்களிற்கு மாற்ற வேண்டிய போதும், மீளாய்வாண்டு வரை 10 ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும் முதிர்ந்த பயிர்களிற்கு மாற்றி பெறுமானத் தேயிவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | நடைமுறை ரீதியாக மரங்களின் இயற்கை தன்மை பிரகாரம் முதிர்வடையும் மரங்களின் அளவை குறித்த தோட்டத்தினால் அறிவித்த பின்னர் முதிர்ச்சியடையாக பயிர்களிலிருந்து அந்த பெறுமானம் முதிர்ந்த பயிர்களிற்கு மாற்றப்படும். எனினும் இதுவரை அந்த முதிர்ச்சியடையாத பயிர்கள் ரூபா 41,998,357 ஆன 2003 – 2014 காலத்தினுள்ள பெறுமதியை மாற்றுவது தொடர்பாக குறித்த தோட்டத் தொகுதியினால் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முன்னர் பிராந்திய அலுவலகங்களின் கணக்கு மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | 11 தோட்டங்களிற்கு உரியதாக ரூபா 2,761,476 ஆன தேயிலை இருப்பு மற்றும் தேயிலை கன்று இருப்புக்கள் பௌதீக ரீதியாக காணப்படாத போதும் இருப்பினுள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | இந்த ரூபா 2,761,476 ஆன தேயிலை இருப்பு மற்றும் தேயிலை கன்று இருப்புக்கள் இல்லையென கணக்காவின் உறுதிப்படுத்தல் கிடைத்த பின்னர் பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு மீள் மதிப்பீடு செய்வதன் மூலம் இருப்புக்களின் பௌதீக ரீதியான நிலைத்திருத்தலை உறுதி செய்ய வேண்டுமென மற்றும் அதன் பிரகாரம் தேவையான கணக்கீடு மற்றும் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (கா) | சபையின் நிதிக்கூற்றுக்களில் ஏனைய உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் கிரயம் ரூபா 17,925,652 ஆக காண்பிக்கப்பட்ட போதும், மீளாய்வாண்டு இறுதியில் திரண்ட பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 18,520,206 ஆனதில் சொத்துக்களின் தேறிய புத்தக பெறுமதி ரூபா 594,554 ஆன மறை மீதியாக காணப்பட்டது. | இந்த பெறுமதி 2016 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிவருவதுடன் கிரயத்தை விஞ்சி பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள பெறுமதி தொடர்பாக மீண்டுமொறு முறை கண்டறிந்து தகவல்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக் கிரயத்தை விஞ்சி பெறுமானத் தேய்விடலை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கி) | சிலாபம் பெறுந்தோட்ட கம்பனி 2019 ஆண்டு முதல் சபைக்கு சொந்தமான கட்டிடமொன்றில் அலுவலகமொன்றை மற்றும் விற்பனை நிலையமொன்றை எவ்வித கொடுப்பனவும் இன்றி நடாத்திச் சென்றிருந்ததுடன், 2019 ஆண்டு முதல் 2023 | 2019 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை சிலாபம் பெறுந்தோட்ட கம்பனி கீழ் மாடியில் நடாத்திச் செல்லும் அலுவலகம் மற்றும் விற்பனை நிலையம் தொடர்பாக இதுவரை உடன்படிக்கையிற்கு உட்படாததால் இதற்கு முன்னர் | சபையின் ஆதனங்களை பயன்படுத்தும் அனைத்து தரப்பினர்களுடனும் குத்தகை உடன்படிக்கைக்கு உட்படல் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு வரை அரச பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் கணக்கிட்டிருந்த ரூபா 11,098,220 ஆன குத்தகை தொகை சபைக்கு கிடைக்க வேண்டியதாக இனங்கண்டு இருந்த போதும், அத் தொகையை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிப் பிரிவினால் கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை தொடர்பாக கணக்கு பிரிவை அறிவுருத்தி இல்லாததால் கணக்கீடு செய்யப்படவில்லை. அவ்வாறாயினும் அவ்வாறான பெறுமதி தொடர்பாக உத்தியோக பூர்வமாக கணக்கு பிரிவை அறிவுருத்தல் ஒன்று 2025.11.25 ஆம் திகதி பிரதி தலைவரினால் குறித்த நிறுவனத்திற்கு அறிவித்து கணக்கு பிரிவிற்கு பிரதி அனுப்பியுள்ளதால் எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அதன் பிரகாரம் குத்தகை தொகை காலரீதியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கீ) | லுல்கந்துர தோட்டத் தொகுதியில் பொருத்துவதற்காக எரிபொருள் தாங்கியொன்றை கொள்வனவு செய்ய வாடிக்கையாளரிற்கு செலுத்திய ரூபா 1,614,000 ஆன முற்பணம் சபையின் நடைமுறை வேலையாக குறிப்பிடப்பட்ட காரணத்தால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாத சொத்துக்கள் அப்பெறுமானத்தால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பௌதீக ரீதியாக இந்த எரிபொருள் தாங்கியை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு இதுவரை கிடைக்காத போதும் அதற்கான மொத்தக் கிரயத்தின் 60% பகுதி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இந்த எரிபொருள் தாங்கி தற்போது பௌதீக ரீதியாக கிடைத்திருக்காததால் நடைமுறை வேலையாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அந்த தாங்கி வேலை நிறைவடைந்து கிடைத்த பின்னர் குறித்த சொத்துக் கணக்கிற்கு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும் இந்த காசு பெறுவனவு சொத்தொன்றை நிறுவி (பொருத்திக் கொள்வது) தொடர்பாக வழங்கப்பட்டுள்ளதால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாத சொத்து மிகை கணக்கிடல் இடம்பெறவில்லை. | சொத்துக் கொள்வனவு ஒன்றாக பெறுகை செய்யப்பட்டிருந்தது டன் வழங்கியுள்ள நிதியை முற்பணமாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (கு) | உயிரியல் விஞ்ஞான சொத்து தொடர்பாக Bearer Plants இனுள் காணப்பட்ட ரூபா 7,859,380 ஆன முதிர்ச்சியடையாத ஏனைய பயிர்கள் பௌதீக ரீதியாக இருக்காத போதும் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | பௌதீக ரீதியாக இந்த பயிர்கள் இல்லையென குறித்த தோட்டத்தினால் அறிவித்ததால் இந்த பயிர்களை முதிர்ந்த பயிர்களிற்கு மாற்றுதல் மேற்கொள்ளப்படவில்லை. | வருடாந்தம் கணிப்பீட்டின் மூலம் வருடாந்தம் சொத்துக்களின் பௌதீக ரீதியான நிலைத்திருத்தலை உறுதி செய்து கொண்டு தேவையான சீராக்கங்களை |

நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள வேண்டும்.

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திலிருந்து சபைக்கு பெற வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி | 119,318,496 | 97,709,342 | 21,609,154 | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 119,318,496 தொகையை பகுப்பாய்வு செய்து பொழிப்பறிக்கை ஒன்றை எம்மால் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கும், அரச கணக்காய்விற்கு மற்றும் அமைச்சின் கணக்காய்விற்கும் வழங்கியுள்ளதுடன், எம்மால் அனுப்பப்பட்ட அறிக்கைக்கு பதிலாக அவர்களின் கணக்குகளின் பிரகாரம் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய பேரேட்டுக் கணக்குகளின் பிரதிகள் மாத்திரம் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் எமக்கு அனுப்பியுள்ளதுடன், போதியளவான தகவல்கள் இல்லாததால் அந்த கணக்குகளுடன் ஒப்பாய்வு செய்வது கடினமாகவுள்ளது. | அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்துடன் மீதிகளை இணக்கம் செய்து சரியான மீதிகளை இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தலைமை அலுவலகத்தின் வாகன பெறுமானத் தேய்வு | 39,364,442 | 39,270,957 | 93,484 | 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்பட்டுள்ளது. | கணக்குகளை இணக்கம் செய்து சரியான மீதிகளை நிதிக்கூற்றுக்களில் |

| | | | |
|---|---|---|---|
| | | | உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.4 சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொடர்ந்து நட்டமடைவதன் மீது 2023 திசெம்பர் 31 திகதி உள்ளவாறான சபையின் தேறிய சொத்துக்கள் மற்றும் செயற்படு மூலதனம் முறையே ரூபா 1,107,147,225 மற்றும் ரூபா 2,351,853,826 ஆன மறை பெறுமானத்தை எடுத்திருந்ததுடன் அத்திகதியில் செலுத்த வேண்டிய நியதிச்சட்ட கொடுப்பனவுகள் ரூபா 2,399,597,208 ஆகவிருந்தது. இந்த கடப்பாட்டை தீர்ப்பதற்கு போதியளவான முதலீடுகளும் செய்யப்பட்டிருக்காததுடன் இங்கு தீர்க்க வேண்டிய வங்கி கடன் மீதி ரூபா 167,188,744 ஆகவிருந்தது. அதன் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 25 பந்தி பிரகாரம் சபையின் தொடர்ந்தியற்கும் தன்மை தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.<br><br>அவ்வாறே 2023 ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 2.4 மூலம் சபையை மீள் ஒழுங்கு செய்ய வேண்டுமென பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்த போதும் 2025 நவம்பர் 07 திகதி வரை அவ்வாறான மீள் ஒழுங்கமைத்தல் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | சபைக்கு சொந்தமாக காணப்படும் காணி கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை உரியவாறு மீள் மதிப்பீடு செய்து அப் பெறுமானங்களை புத்தகங்களிற்கு எடுக்காத காரணத்தால் மறை பெறுமானத்தை எடுத்துள்ளதுடன் மீண்டும் செத்துக்களை மதிப்பீடு செய்தால் அப் பெறுமானம் நேர் பெறுமானமாகும். எனினும் அந்த செயற்பாட்டை மேற்கொள்ள முடியாமலிருப்பது நிறுவனத்தில் தொடர்ந்தும் நிலவும் தொழிற்படு மூலதன பற்றாக்குறையாகும். இதன் காரணமாக இங்கு குறிப்பிடப்படும் நியதிச் சட்ட கொடுப்பனவுகளை செய்வதனை கூட செய்ய முடியாதுள்ளதாக குறிப்பிடுகிறேன். அவ்வாறே அவ்வப் போது வருடாந்தம் பொது திறைசேரியிடமிருந்து கிடைத்த நிதியிலிருந்து இந்த நியதிச் சட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மூலம் 2023 ஆண்டில் சமர்ப்பித்த அமப:23/0767/616/017 இன் பிரகாரம் மாதாந்தம் ரூபா 30 மில்லியன் வீதம் இந்த நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவுகளை செலுத்த நிதி வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த தொகையிலிருந்து நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவு தற்போது செலுத்தப்படுகின்றது. அவ்வாறாயினும் நிகழ்கால் நியதிச் சட்ட கொடுப்பனவுகள் (EPF/ETF) 2023 ஜுலை மாதம் முதல் படிப்படியாக நிறுவன நிதியினால் இதுவரையும் நிலுவை ஏற்படாதவாறு செலுத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிடுகிறோம்.<br>2024 நிதிக்கூற்றுக்களிற்கான | சபைக்கு சொந்தமாகக் காணப்படும் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை உரியவாறு மீள் மதிப்பீடு செய்து அப்பெறுமதிகளை புத்தகங்களிற்கு எடுக்கவும் நிறுவனத்தில் தொடர்ந்தும் நிலவிவரும் செயற்பாடு மூலதன பற்றாக்குறையை தவிர்த்துக் கொள்ள மூலோபாயத்தை தயாரித்துக் கொள்ளவும் பணிப்பாளர் சபை தீர்மானம் பிரகாரம் சபையை மீள்ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

குறிப்பு இலக்கம் 2.4 மூலம் காண்பித்துள்ள காண்பித்துள்ள மீள்ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் ஒவ்வொறு அரசியல் அதிகாரங்களினதும் மாற்றலுடன் ஒவ்வொறு குறித்த மீள்ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்படுவதாக அறிவித்த போதும் இதுவரை அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை.

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | சபையின் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரண மீதியில் அடங்கியுள்ள தலைமை அலுவலகத்தின் காணி, கட்டிடங்கள் மற்றும் தோட்டத் தொகுதிகளின் கட்டிடங்கள், ஓனுகல்ஒய தோட்டத் தொகுதிக்குரிய நிலையான சொத்துக்கள் மீதி மற்றும் ஏனைய மீதிகள், நீர் வழங்கல் செயற்திட்டத்தின் மீதி மற்றும் ஹரங்கல மற்றும் டயிஸ்பேன் தோட்டத் தொகுதியின் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமதி | 1,579,600,504 | ஒப்பீட்டு பரிசோதனை தொடர்பாக காணிகளின் தளக்கோலங்கள், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள், சாத்தியப்பாட்டு ஆய்வு அறிக்கை, வருடாந்த பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள். | தலைமை அலுவலகத்தின் காணி மற்றும் கட்டிடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ள தலைமை அலுவலத்திற்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 1,543,300,120 இல் அடங்கியுள்ள ரூபா 1,489,375,963 தொடர்பாக விரிவான தகவல்கள் 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் வழங்கப்பட்டது. ஏனைய ஆதனங்கள் மற்றும் கட்டிடங்களுக்குரிய விரிவான தகவல்களை கண்டறிய முடியாதுள்ளது. | காணி, கட்டிடங்கள் மற்றும் ஏனைய ஆதனங்களின் உரிமை மற்றும் நிலைத்திருத்தலை உறுதி செய்வதற்காக 2020 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் போதாததுடன் போதிய சான்றுகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | நுகர்வுப் பிரிவின் பழைய கடன்படுனர் மீதி, மொன்தர் கிரிஸ்டோ தோட்டத் தொகுதியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிற்கு உரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி, பெறவேண்டிய நிறுத்தி வைத்த வரி மற்றும் பெறுமதி சேர் வரி, வியாபார பெற வேண்டிய மீதியினுள் அடங்கும் செம்மையாகல் மீதி. | 91,839,885 | மீதி உறுதிப்பாடு, கடன்படுனர் காலப் பகுப்பாய்வு, பௌதீக மெய்மையாய்வு அறிக்கை, விரிவான அட்டவணை மற்றும் இந்த தொகையை அறவிடுவதற்காக எடுக்கப்பட்ட செயற்பாடுகள். | இந்தப் பெறுமதிகள் முன்னைய ஆண்டுகளிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படுவதுடன் அவ்வந்த காலப்பகுதிகளிற்கு தேவையான தகவல்களை கண்டறிந்து மீதிகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | பௌதீக மீதிகளை உறுதி செய்து நிலுவை மீதிகளை அறவிட மற்றும் இனங்காண முடியாத மீதிகளிற்காக நிதிஏற்பாடு ஒதுக்குதல் போன்ற சரியான செயன்முறைகளை பின்பற்றி நிதிக்கூற்றுக்களின் நம்பகத் தன்மையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஓப்படைக்கப்பட்ட ஏனைய உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் | 17,925,652 | பௌதீக மெய்மை ஆய்வறிக்கை, மரக் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் பெறுமதிகளை மதிப்பீடு செய்தமைக்கான அறிக்கை | 1996 இற்கு முன்னரில் இருந்து நிலவிவரும் மீதியாகும் | சொத்துக்களின் நிலைத்திருத்தலை சரியாக இனங்கண்டு மீதியை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு மற்றும் தனியார் நிறுவனத்திற்கு நீண்ட காலமாக செலுத்தவுள்ள மீதி, மஹவெலி வீடமைப்பு செயற்திட்டத்திற்காக செலுத்த வேண்டிய மீதி, வாடகை கொள்வனவிற்கு எதிரான வைப்புக்கள் (Deposit against Asset Lease), செலுத்த வேண்டிய வரிப் | 651,745,631 | மீதி உறுதிப்பாடு, காலப் பகுப்பாய்வு, பூர்த்தி செய்த வேலை அறிக்கை மற்றும் உறுதி செய்த பட்டியல்கள், வைப்புக்களிற்கு உரிய பற்றுச் சீட்டு, உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து கிடைத்த வரி சலுவைக் கால எல்லைகளை காண்பிக்கும் கடிதங்கள், காலரீதியான | எம்.சீ.எம். மார்கடிங் எனும் நிறுவனத்திற்கு செலுத்தவுள்ள ரூபா 5,109,600 பெறுமதி 2017.01.01 திகதியிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் மீதியாகும். 2006 ஆண்டளவில் ஜன தேயிலை பிரிவின் உற்பத்திகள் விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்தல் மேன்பாட்டு நடவடிக்கைகளிற்காக இந்த நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. | கடன் மீதிகளை அறவிடும் இயலுமை தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொண்டு அறவிட முடியாத மீதிகளிற்காக போதிய நிதி ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| பொறுப்புக்களிற்கு (பெறுமதி சேர் வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி, பொருளாதார சேவைக் கட்டணம், உழைக்கும் போது செலுத்தும் வரி) மற்றும் செலுத்த வேண்டிய ஆளணி சம்பளம் மற்றும் ஊதிய மீதி, கடன் மீதி – மக்கள வங்கி, ஏனை வைப்புக்கள், ஏனைய கடன்கொடுனர் மீதி | | கொடுப்பனவுகளிற்குரிய வவுசர்கள், பணிப்பாளர் சபை அங்கீகாரம், கடன் பெற்றுக் கொண்ட திகதி, கடன் தொகை, தவணையுடன் வட்டி மற்றும் கடன் செலுத்துகை | இந்த சந்தர்ப்பத்தில் அவர்களினால் நிறுவனத்துடன் விளம்பர நடவடிக்கைகளை பேணிக் கொள்ள உடன்படிக்கை செய்யப்பட்டது. அபாய செயற்பாடுகளிற்காக அவர்களினால் ரூபா 15 இலட்ச பிணை வைப்புபொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. குருகிய காலப் பகுதியினுள் இந்த செயற்பாடு தோல்வி அடைந்ததன் காரணமாக சந்தைப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து அந்த நிறுவனம் விலகியது. மேலும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு அத் தொகையை செலுத்த வேண்டியதாக நிலவிய போதும் நிறுவனத்திடம் நிதி இல்லாததால் கொடுப்பனவு செய்யப்படவில்லை. மஹவெலி வீடமைப்பு செயற்திட்டத்திற்காக செலுத்த வேண்டிய மீதி, வாடகை கொள்வனவு சொத்திற்கு எதிரான வைப்பு, மக்கள் வங்கிக்கு செலுத்தவுள்ள கடன் தொடர்பான தகவல்கள் நிறுவனத்திடம் காணப்படாததுடன் 2024 முதல் குறித்த வரி உரியவாறு நிறுவனத்தினால் செலுத்தப்பட்டுள்ளது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (உ) | மாற்றமடையாத பழைய பொது ஒதுக்க மீதி, பெருந்தோட்ட அபிவிருத்தி செயற்திட்டம் | 317,167,096 | மானியம் கிடைத்த ஆண்டு, வழங்கிய நோக்கம் மற்றும் பயன்பாடு மற்றும் வழங்கிய தரப்பினர், நிறைவேற்றிய வேலை அறிக்கை, உறுதி செய்த பட்டியல்கள், நிதி கிடைத்த நிதிமூலம் மற்றும் அதனை கணக்கீடு செய்வதற்கான கொள்கை மற்றும் கிடைத்த அங்கீகாரம் | மாற்றமடையாத பழைய பொது ஒதுக்க மீதியானது 2016 ஆண்டு முதல் மாற்றமின்றி நிலவும் பொது ஒதுக்க மீதியிலிருந்து மற்றும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் தேயிலை சபையினால் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு புதிய கன்றுகளை நடுவதற்காக வழங்கப்பட்ட உதவி நிதி மூலம் உருவாகியுள்ளதுடன் பெருந்தோட்ட அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய மீதி தொடர்பான தகவல்கள் நிறுவனத்திடம் இல்லை. | பொது ஒதுக்க மீதிக்குரிய மூல ஆவணங்களை இனங்கண்டு மீதியை உறுதி செய்துகொண்டு தீர்க்கவும் வழங்கிய உதவியை நோக்கத்திற்காக ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் தோட்டத் தொகுதிகளிற்குரியதாக 2023 திசெம்பர் 31 திகதியன்று சமர்ப்பித்திருந்த ரூபா 100,218,824 ஆன வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் காலப் பகுப்பாய்வு அறிக்கை பிரகாரம் 4-5 ஆண்டுகளிற்கு இடையே மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சிய கடன்படுனர் மீதி முறையே ரூபா 3,219,427 தொகை மற்றும் ரூபா 70,676,824 தொகையும், தலைமை அலுவலகத்தின் ரூபா 407,460,537 ஆன வியாபார பெறவேண்டிய மீதிகளிற்கு உரியதாக 3-6 ஆண்டுகளிற்கிடையே பெறவேண்டிய மீதி ரூபா 68,809,030 தொகை எனவும் 6 ஆண்டுகளை விஞ்சிய பெறவேண்டிய மீதி ரூபா 65,078,179 தொகையும், நுகர்வுப் பிரிவின் 5 ஆண்டுகளை விஞ்சிய கடன் அளவு ரூபா 16,590,553 தொகை எனவும், சபையினால் இம் மீதிகளை | தோட்டத் தொகுதிகளிற்குரிய 05 ஆண்டுகளை விஞ்சிய கடன்படுனர் மீதி ரூபா 70,676,824 ஆன மீதி உறுதிப்பாடுகளிற்காக குறித்த தோட்டத் தொகுதிகளிடமிருந்து பெற்று முன்நடவடிக்கை மேற்கொள்வதுடன் தலைமை அலுவலகத்தில் நிலுவை மீதி பட்டியல் வினியோகிக்காமை பிரிவுகளிற்கிடையே மீதி இணக்கம் செய்யாமை மற்றும் குத்தகை உடன்படிக்கைகளின் பிரதிகளை வழங்காமை போன்ற காரணங்களால் சரியற்றதாக இருக்க முடியுமாவதுடன் அம் மீதிகள் தற்போது சரிசெய்யப்படுகின்றன. மேலும் நுகர்வுப் பிரிவின் 05 ஆண்டுகளை விஞ்சிய கடன்படுனர் மீதியினுள் ரூபா 9,945,368 மீதியொன்று காணப்படுவதுடன் இத் | தலைமை அலுவலகத்தில் மற்றும் தொட்டத் தொகுதிகளில் பல ஆண்டுகளாக நிலவிவரும் நிலுவை மீதிகளை அறவிட வேண்டிய நிறுவனங்களை இனங்கண்டு அறவிட மற்றும் தொங்கல் மீதிகள் தொடர்பாக நிதிஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. | தொகையை பெற்றுக் கொள்வது தொடர்பாக நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது. 2018 ஆண்டிற்குரிய ரூபா 6,645,190 தொகையில் உள்ள ரூபா 5,904,575 தொகையை இலங்கை இராணுவத்திடமிருந்து கிடைப்பதில்லையென உறுதி செய்துள்ளதால் 2024.12.31 திகதி அப் பெறுமதி புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. | |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் தோட்டத் தொகுதிகளிற்கு உரியதாக 2023 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 134,281,448 ஆன கடன்கொடுனர் காலப் பகுப்பாய்வின் பிரகாரம், 04-05 ஆண்டுகளிற்கு இடையே ரூபா 12,798,280 தொகை மற்றும் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 83,011,323 தொகையும், தலைமை அலுவலகத்தில் ரூபா 107,089,546 ஆன வியாபார கடன்கொடுனர் மீதியினுள் 01-03 ஆண்டுகளிற்கு இடையே ரூபா 18,545,658 தொகையும், 06 ஆணடுகளை விஞ்சிய ரூபா 81,531,648 ஆன கடன்கொடுனர் மீதியினுள் ரூபா 16,556,476 தொகை பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்திற்குரிய மீதி மற்றும் ரூபா 57,307,354 ஆன வீதவரி கட்டணம் எனும் மீதிகள் முக்கியமாக காணப்படுவதுடன் தீர்ப்பதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தோட்டத் தொகுதிகளின் கடன்கொடுனர் மீதியினுள் அடங்கும் 4-5 ஆண்டு காலத்திற்குரிய ரூபா 12,798,280 தொகை மற்றும் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 83,011,323 தொகையான கடன்கொடுனர் மீதி உண்மையாக காணப்படுகின்றனவா என கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளல் மற்றும் நிறுவனத்தின் நிதி நிலைமையின் பிரகாரம் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுனர் மீதிகளை உறுதி செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டம், விதி, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மைகள்**

| | சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 842 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | சபையின் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டத் தொகுதிகளுக்கு சொந்தமாக காணப்படும் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண மீதிகள் தொடர்பாக சொத்துக்களின் | கணக்கு தேவைப்பாட்டிற்காக நிறுவனத்தினால் தோட்டங்களுக்காக மற்றும் தலைமை அலுவலகத்திற்காக வெவ்வேறாக நிலையான | சுற்றறிக்கை பிரகாரம் உரிய தகவல்களை உள்ளடக்கி நிலையான சொத்து பதிவேடொன்றை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வகை, கொள்வனவு செய்த பெறுமதி மற்றும் திகதி வாகனங்கள் மராதீனம் செய்தல், வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள், அகற்றுதல்கள், மாற்றுதல்கள் மற்றும் ஒவ்வொரு சொத்துக்களில் வெவ்வேறாக இனங்காணக் கூடியவாறு குறிப்பிட்ட தகவல்களை அடக்கிய முறையாக தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று சபையினால் பேணிச் சென்றிருக்கவில்லை. | சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் முறையே 1996 ஆண்டு மற்றும் 2008 ஆண்டு முதல் பதிவேடொன்று பேணப்பட்டு வருவதுடன், முறையான நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்லல் மேற்கொள்ளப்படவில்லை. எதிர் காலத்தில் சரியான முறையில் நிலையான சொத்துப் பதிவேடொன்றை பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பேணிக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் உபபிரிவு 16(1) | 2011 ஆண்டு முதல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 61,873,517 ஆன பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டு இருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதிவரை நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மிகை அறவீட்டு மீதி ரூபா 6,871,791 தொகையானது. | நிறுவனத்தின் நிலவிய கடின தொழிற்படு மூலதன நிதி நெருக்கடியின் காரணமாக சுமார் 2002 ஆம் ஆண்டு முதல் EPF / ETF தொடர்ச்சியாக செலுத்துவதற்கு முடியாமல் இருந்ததுடன், நிதி அமைச்சின் மூலம் சில ஆண்டுகளில் இந்த நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவுகளுக்காக நிதியம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, அந்தப் பணத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டது. மேலும், 2023 ஆண்டின் அமைச்சரவை பத்திர இலக்கம் 23/0768/616/017 மற்றும் 25/1838/813/015-1 இன் பிரகாரம் ரூபா 30 மில்லியன் தொகையொன்று ஒவ்வொரு மாதத்திலும், இந்த நிலுவை நியதிச்சட்ட கொடுப்பனவை மீண்டும் செலுத்துவதற்காக வழங்கப்பட்டு வந்ததுடன் அதன் மூலம் நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவு மீண்டும் செலுத்தி வரப்பட்டது. மேலும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டத்தின் பிரகாரம் மற்றும் | சட்டத்தின் பிரகாரம் உரிய திகதிக்கு நியதிச் சட்ட கொடுப்பனவுகளை செலுத்த வேண்டியதுடன் நீண்டகாலமாக செலுத்த வேண்டியிருந்த தொகையை தீர்க்கவும், தவணைகளை உரியவாறு செலுத்துவதன் ஊடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரகாரம் 2023 ஜூலை முதல் தற்போதைய நியதிச் சட்ட கொடுப்பனவுகள் நிறுவனத்தின் பணத்தினால் படிப்படியாக செலுத்தப்பட்டு வருகின்றது. | |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பகுதி ii இன் உபபிரிவு 5(1) | ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற அல்லது மரணமடைந்த தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 779,936,336 ஆன செலுத்த வேண்டிய பணிக்கொடை மீதியொன்று மற்றும் ரூபா 261,651,215 இற்கான செலுத்த வேண்டிய மிகை அறவீட்டு மீதியொன்றும் காணப்பட்டது. | தொடர்ச்சியாக நிறுவனத்தில் நிலவுகின்ற தொழிற்படு மூலதன நிதி நெருக்கடியின் காரணமாக நிறுவனத்தின் ஊழியர் பணிக்கொடைத் தொகையை உரிய முறையில் செலுத்துவதற்கு முடியாமல் இருந்ததுடன், தற்போது வழக்குத் தாக்கல் செய்த ஊழியர்களுக்கு 2023 ஆண்டின் அமைச்சரவை பத்திர இலக்கம் 23/0768/616/017 மற்றும் 25/1838/813/015-1 இன் பிரகாரம் மாதாந்தம் கிடைக்கப் பெற்ற ரூபா 30 மில்லியன் தொகையில் மற்றும் தற்போது காணப்படும் காசுப் பாய்ச்சல் மூலம் சேவையை விட்டு விலகிச் சென்ற மற்றும் செல்கின்ற ஊழியர்களிற்கு பணிக்கொடைத் தொகை செலுத்துதல் மேற்கொள்ளப்படும். | பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடைையை உரிய காலத்தில் செலுத்த நடவடிக்கை எடுத்து சிக்கனமற்ற செலவுகளை தவிரத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 1998 இன் 15 ஆம் இலக்க திருத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவு 15 | செலுத்த வேண்டிய சேமலாப தொகையாக ரூபா 1,035,396,366 உம் தோட்ட பதவியணி சேமலாப சங்கத்திற்கு (ESPS) மற்றும் இலங்கை பயிர்ச் செய்கையாளர்களின் சேமலாப சங்கத்திற்கு (CPPS) ரூபா 173,331,837 இற்கான நிலுவை மீதியொன்றும் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றின் | நிறுவனத்தின் நிலவிய கடின தொழிற்படு மூலதன நிதி நெருக்கடியின் காரணமாக சுமார் 2002 ஆம் ஆண்டு முதல் EPF / ETF தொடர்ச்சியாக செலுத்துவதற்கு முடியாமல் இருந்ததுடன், நிதி அமைச்சின் மூலம் சில ஆண்டுகளில் இந்த நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவுகளுக்காக நிதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்தப் | சட்டத்தின் பிரகாரம் உரிய திகதிக்கு நியதிச் சட்ட கொடுப்பனவுகளை செலுத்த வேண்டியதுடன் நீண்டகாலமாக செலுத்த வேண்டியிருந்த தொகையை தீர்க்கவும், தவணைகளை உரியவாறு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரகாரம் நிதியத்திற்கு ரூபா 80,536,147 இற்கான செலுத்த வேண்டிய மிகை அறவீடும் செலுத்தியிருக்கவில்லை. | பணத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டது. மேலும் 2023 ஆண்டின் அமைச்சரவை பத்திர இலக்கம் 23/0768/616/017 மற்றும் 25/1838/813/015-1 இன் பிரகாரம் ரூபா 30 மில்லியன் தொகையொன்று ஒவ்வொரு மாதத்திலும், இந்த நிலுவை நியதிச்சட்ட கொடுப்பனவை மீண்டும் செலுத்துவதற்காக வழங்கப்பட்டு வந்ததுடன் அதன் மூலம் நிலுவை நியதிச் சட்ட கொடுப்பனவு மீண்டும் செலுத்தி வரப்பட்டது. மேலும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப சட்டத்தின் பிரகாரம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பிரகாரம் 2023 ஜூலை முதல் தற்போதைய நியதிச் சட்ட கொடுப்பனவுகள் நிறுவனத்தின் பணத்தினால் படிப்படியாக செலுத்தப்பட்டு வருகின்றது. | செலுத்துவதன் ஊடாக சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2015 மே 25 இன் 01/2015 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 மற்றும் 3.1 பந்தி | பொது முயற்சிகள் தலைவர், நிறைவேற்று அதிகாரி, முகாமைத்துவ பணிப்பாளர், நிறைவேற்று பணிப்பாளர், பணிப்பாளர் நாயகம், பிரதான நிதி உத்தியோகத்தர், பிரதாக செயற்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்துள்ள HM 1-1 தொகுதியில் அல்லது அதைவிட உயர்ந்த மட்டத்தின் பதியொன்றை வகிக்கும் எந்தவொறு உத்தியோகத்தரிற்கும் உத்தியோகபூர்வ வாகனமொன்றை பெற்றுக் கொள்ள தகைமை கிடைப்பதாகவும் உத்தியோகபூர்வ வாகனம் | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வினியோகிக்கப்பட்ட எரிபொருள் மற்றும் போக்குவரத்து படிகள் தொடர்பான சுற்றறிக்கையின் கீழ் MM 1-1 தரத்தின் உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து படிகள் உரித்தற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பின்வரும் காரணங்ளிற்காக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையை இஸ்தாபித்த 1972 இன் 11 இலக்க கமநல சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க இந்த நிறுவனத்தின் அவ்வாறான உத்தியோகத்தர்களிற்கு | பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு மாற்றமாக செயற்படக் கூடாது. |

உரித்தான உத்தியோகத்தர்களிற்கு குறித்த எரிபொருள் படிகள் உரித்தான போதும், சுற்றறிக்கைக்கு மாற்றமாக எரிபொருள் மற்றும் போக்குவரத்து படிகள் உரித்தற்ற நிரந்தர 09 உத்தியோகத்தர்களிற்கு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 03 உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து படிகளாக ரூபா 4,590,000 தொகை எரிபொருள் படிகளாக ரூபா 3,702,980 தொகையும் 2023 ஆண்டிற்காக செலுத்தியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

போக்குவரத்து படிகளை வழங்க நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அச் சட்டத்தின் 5b,5c,8.8(1)b 8.1 உப பிரிவுகளின் கீழ் அவ்வாறான தீர்மான முடிவுகளை எடுக்கும் இயலுமை இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு கிடைத்துள்ளது. மேலும் இந்த முகாமையாளர்கள் மற்றும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையிற்கு இடையே பொது முகாமையாளர் பதவி தவிர வேறு எந்தவொரு பதவியும் உள்ளடங்காததால் இந்த உத்தியோகத்தர்களின் பதவிகளிற்கு உரிய கடமைகளின் தன்மையின் மீது அவர்களிற்கு ஒப்படைத்துள்ள கடமைகளிற்கு மேலதிகமாக அப்பதவி எல்லைக்கு அப்பாற்பட்ட உயர் கடமை செயற்பாடுகளை நிறைவேற்ற நேர்ந்துள்ளது. அதன் காரணமாக அவர்கள் HM 1-1 தரத்திற்கு உட்பட்ட கடமைகளில் ஈடுபடுகின்றனர். நிறுவனத்தின் குறித்த கடமைகளை தொடர்ந்து மற்றும் தாமதமின்றி நிறைவேற்றிக் கொள்ள அங்கீகார ஆளணி எண்ணிக்கை திட்டத்தினுள் அவ்வாறான உயர் பதிவிகள் உள்ளடங்காததால் மற்றும் அவ்வாறான பதவிகளை உருவாக்கிக் கொள்வதற்காக நீண்ட காலம் செல்வதால் இந்த அலுவலர்களிற்கு அந்த எரிபொருள் போக்குவரத்து படிகளை வழங்க பணிப்பாளர் சபையினால் நடவடிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுக்கப்பட்டுள்ளது. 2020 ஆண்டில் பணிப்பாளர் சபை சம்பளம் செலுத்தியுள்ளதானது சபையின் நிதியை மாத்திரம் பயன்படுத்தி ஆகும். திறைசேரியிடம் சம்பளம் செலுத்துவதற்காக நிதி பெறப்படவில்லை. இதற்கு மேலதிகமாக இந்த படிகளை செலுத்தும் அலுவலர்கள் சிலரினது நியமனக் கடிதங்களில் அவர்களிற்கு இந்த படிகளை வழங்க தொழில் வழங்குனர் கடப்பட்டுள்ளதுடன் நியமனக் கடிதம் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்களிற்கு ஏற்படும் முரண்பாடுகளை தவிர்க்க ஏனைய உத்தியோகத்தர்களிற்கும் இப் படிகள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஊ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 93 | 2022/2023 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய வருமான வரி அறிக்கை 2025 நவம்பர் 07 திகதி வரையும் சமர்ப்பித்திருக்கவில்லை. | நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தாமதமடைந்த காரணத்தினால் வருமான வரி அறிக்கையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதில் தாமதம் அடைந்திருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் தேவை இதற்கான காரணமாகும். | சட்டத்தின் பிரகாரம் மதிப்பீட்டு ஆண்டிற்குரிய வருமான வரி அறிக்கையை சமர்ப்பித்து வரிமான வரி செலுத்த வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 147,859,712 ஆன நட்டமொன்றானதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 20,000,509 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 167,860,221 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த இலாபத்தின் வீழ்ச்சிக்கு பிரதானமாக சபையின் தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான உரிய விற்பனை வருமானம் ரூபா 123,599,985 தொகையினால் குறைந்தமையும் மற்றும் செயற்பாடு மற்றும் வினியோகக் கிரயம் ஒட்டுமொத்தமாக ரூபா 30,968,667 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் தேயிலை கொழுந்து விற்பனை மூலம் கிடைத்த வருமானம் 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டின் போது 9.6 சதவீதத்தினால் குறைவடைந்து இருந்ததுடன், இறப்பர் பயிர்ச் செய்கைகள் மூலம் கிடைத்த வருமானம் 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் 26 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது. 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டின் தேயிலைக் கொழுந்து மற்றும் நுகர்வுப் பிரிவின் தேயிலை உற்பத்திக்குரிய கிரயம் முறையே 0.3 சதவீதத்தினால் அதிகரித்தல் மற்றும் 11 சதவீதத்தினால் குறைவு ஏற்பட்டிருந்தது. அதேபோல், இறப்பர் பயிர்ச்செய்கைக்குரிய கிரயம் 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டின் போது 2.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது நடைமுறை விகிதம் 0.35 : 1 மற்றும் 0.34 : 1 ஆகக் காணப்பட்டது.
- மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது விரைவு சொத்து விகிதம் 0.31 : 1 மற்றும் 0.30 : 1 ஆகக் காணப்பட்டது.
- மீளாய்வாண்டு மொத்த இலாப விகிதம் 3.29 சதவீதமாக காணப்பட்டதுடன், கடந்த ஆண்டின் போது மொத்த இலாப விகிதம் 2.79 சதவீதமாக காணப்பட்டது.
- மீளாய்வாண்டின் போது தேறிய இலாப விகிதம் 11.6 சதவீதமாக காணப்பட்டதுடன், கடந்த ஆண்டின் போது தேறிய இலாப விகிதம் 1.43 சதவீதமாக இருந்தது.

சபையின் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் மேற்கூறிப்பட்ட விகித பரிசோதனையின் போது நிலவுகின்ற நடைமுறைச் சொத்துக்களின் மூலம் அதன் நடைமுறைப் பொறுப்புக்களை தீர்த்துக்கொள்ளும் இயலுமையொன்று காணப்படவில்லை எனவும் மற்றும் நிறுவனத்தின் உரிமை மூலதனத்தை மிகைத்து கடன் மூலதனம் காணப்படுவதன் ஊடாக நிறுவனத்தில் காணப்படும் நிதி நெருக்கடி மற்றும் தொடந்தியங்கும் ஆபத்து நிலைமை தொடர்பாக கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி தலைமை அலுவலகத்தின் மற்றும் தோட்டத் தொகுதிகளின் 7 கணக்கீட்டுச் செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்குரிய மென்பொருள் முறைமையொன்றிற்காக தனியார் கம்பனியொன்றுக்கு 2021 ஆண்டு முதல் 2025 ஏப்ரல் 30 திகதி வரை மென்பொருள் நிறுவுதல் மற்றும் மாதாந்த கொடுப்பனவாக ரூபா 16,562,250 தொகை உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மென்பொருள் முறைமையின் மூலம் கூட்டிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல், இருப்புக் கட்டுப்பாடு மற்றும் வருமானம் மற்றும் செலவுக் கட்டுப்பாடு ஆகிய குறிக்கோள்கள் உரியவாறு நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | இது தொடர்பாக கணக்கு பிரிவினால் தொடர்ச்சியாக கட்டுப்பாட்டு சபைக்கு அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது. | நிறைவேற்றப்படாத கணக்கியல் செயற்பாடுகளை முறைமைக்கு உட்படுத்திக் கொள்ள அல்லது மிகையாக செலுத்திய தொகையை மீள் அறவிட நடவடிக்கை வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆண்டின் போது தோட்டத் தொகுதிகளிற்காக Sage மென்பொருள் தொகுதியொன்றை அறிமுகம் செய்வதற்காக ஒரு தோட்டத் தொகுதிக்காக ரூபா 48,611 வீதம் 17 தோட்டத் தொகுதிகளிற்காக ரூபா 826,387 தொகை செலவிடப்பட்டு இருந்ததுடன் கணக்கீட்டுத் தொகுதி செயற்படாத காரணத்தால் மீளாய்வாண்டு இறுதியில் இந்த கிரயம் சிக்கனமற்ற செலவொன்றாக காணப்பட்டது. | தோட்டத் தொகுதிகளில் இந்த Sage மென்பொருள் பயன்படுத்தல் தற்போது மேற்கொள்ளப்படவில்லை. அதற்காக செலவிடப்பட்டிருந்த செலவினை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டத்ததை தயாரித்து ஆக்கபூர்வ செயற்பாடுகளிற்கு மாத்திரம் நிதி செலவிடப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நாகஸ்தென்ன மற்றும் கந்தல்ஒய தோட்டத் தொகுதிகளில் முறையே ரூபா 1,539,546 தொகை மற்றும் ரூபா 1,256,046 இற்கான பணம் திருட்டு நடைபெற்று சுமார் 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும், தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு அலுவல்களின் தற்போதைய நிலைமையை கண்டறிந்திருக்காததுடன் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழக்கு இலக்கம் HC 223/20 இன் கீழ் கண்டி உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. 2025.12.11 திகதி மீண்டும் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் வழக்கு அலுவல்கள் காணப்படுவதனால் நட்டத்தை அறவீடு செய்வதற்கு முடியாமல் உள்ளதுடன், எதிர்வரும் சட்ட முயற்சியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தீர்ப்பின் பிரகாரம் நட்டத்தை அறிவிட நடவடிகதை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2007 நவம்பர் மாதம் முதல் நாகஸ்தென்ன தோட்டத் தொகுதியை தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாவதற்கு முன்னர் தோட்டத் தொகுதியில் 120 மரங்கள் அந்தக் கம்பனியினால் அங்கீகாரம் இன்றி வெட்டி அகற்றப்பட்ட காரணத்தினால் அந்த தோட்டத் தொகுதி மீண்டும் சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருந்தது. அந்த மரங்களின் நட்டத்தை அறவீடு செய்வதற்காக 2008 மே மாதம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த நட்டத்தை மதிப்பீடு செய்து | 2007 ஆண்டின் போது நாகஸ்தென்ன தோட்டத் தொகுதியின் நிருவாகம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் குவின்ரிஷ் எக்ரோ தனியார் கம்பனியுடன் இணைந்து நிறுவப்பட்டிருந்த சிலோன் யுனைடட் பிலான்டேஷன் லிமிடட் ஆரம்பிப்பதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைத்தாச்சிடப்பட்டிருந்ததுடன், குவின்ரிஷ் எக்ரோ தனியார் கம்பனியினால் ரூபா 30 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பணம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் நாகஸ்தென்ன தோட்டத் தொகுதியின் நிலுவை நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் தோட்டத் தொகுதியின் | சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை குத்தகைதாரரிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், வழக்கு அலுவல்களும் இரு தரப்பினர்களும் இணக்கப்பாட்டுடன் நட்டஈடு ஏதும் பெற்றுக் கொள்ளாமல் 2009 திசெம்பர் 28 திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தது. | நிருவாகம் சிலோன் யுனைடட் பிலான்டேஷன் பிரைவட் லிமிடட் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அங்கு நாகஸ்கந்த தோட்டத் தொகுதியில் காணப்பட்ட 120 வணிகப் பெறுமதியுள்ள மரங்கள் வெட்டப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ரூபா 11,200,000 தொகை நட்டமொன்று தோட்டத் தொகுதிக்கு ஏற்பட்டிருந்ததென அப்போதைய பெருந்தோட்ட முகாமையாளரினால் கூற்றொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் மரங்களின் பெறுமதி ரூபா 7,529,688 இற்கான பெறுமதியின் மீது அந்த மரம் வெட்டுவதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த B-2683/08 இலக்கம் கொண்ட வழக்கு இணக்கமடைந்திருந்தது. அந்தப் பெறுமதி மாவட்ட வன உத்தியோகத்தரினால் 2008.08.12 திகதி பெற்றுக் கொள்ளப்பட்டதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரதியொன்று என்னிடம் காணப்படவில்லை. அதன் பிரதியொன்றை பற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவிக்கின்றேன். | |
| (இ) | 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் மாற்றுக் காணிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் காணப்படாத போதிலும் 2019 ஜூலை 23 திகதிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பென்ரீன் தோட்டத்தின் 22 ஏக்கர் 00 ரூட் 30.08 பர்சஸ் இற்கான மாற்றுக் காணிகளாக இரண்டு நபர்களுக்கு ஹன்தான உடுவெல தோட்டத் தொகுதியிலிருந்து காணி வழங்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் 2020 ஜூலை 31 திகதி இந்தக் காணியின் உரிமையை ரூபா 101,109 தொகையான குறைந்த பெறுமதிக்கு குறிப்பிட்ட இரண்டு நபர்களுக்கும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், | இரண்டு நபர்களுக்கு கொழும்பு மாவட்டத்தில் பென்ரித் தோட்டத் தொகுதி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் வழங்கியிருந்த 22 ஏக்கர் 30.02 பர்சஸ் காணி அளவை விடுவிப்பதற்காக புஸல்லாவ பெருந்தோட்ட கம்பனி நடவடிக்கை எடுக்காமையின் மீது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் அதற்கு மாற்றீடாக உடுவெல தோட்டத் தொகுதியில் இருந்து 22 ஏக்கர் 30.08 பர்சஸ் வழங்கும் படி வேண்டப்பட்டது. அதன் பிரகாரம் அந்தக் கோரிக்கை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது. அதன் பிரகாரம் இந்தக் கோரிக்கைக்கு இந்தக் காணிப் பகுதியை வழங்குவதற்கான அங்கீகாரம் | கமத்தொழில் அபிவிருத்திக்காக சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகளிலிருந்து மாற்றுக் காணிகளை வழங்க சபையின் அங்கீகாரத்தை வழங்குதல் மற்றும் அது தொடர்பாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் உறுதி வழங்கியமை தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| விற்பனை உடன்படிக்கை இலக்கம் 5792 இன் மூலம் இந்தக் காணியின் உரிமையாளரினால் 2020 திசெம்பர் 11 திகதி குறிப்பிட்ட காணியை ஆதன விற்பனை கம்பனி ஒன்றிற்கு (Land Sale) ரூபா 159,753,600 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், அது பின்னர் ஹோட்டல் ஒன்றிற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு 2025 ஜூலை 22 திகதி அளவிலும் விற்பனை செய்யப்பட்டிருந்தது. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணியின் பெறுமதி தொடர்பாக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை எதுவித தீர்மானமும் எடுத்திருக்காததுடன், அதற்காக தலையீடு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மேற்கொள்ள முடியாது எனவும் அறிவிக்கப்படுவதுடன், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் மேற்கூறிய நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காணி உறுதியின் மீது பின்னர் இந்தக் காணிக்கான உறுதி எழுதப்பட்டுள்ளது என குறிப்பிடப்படுகின்றது. | |

### 3.3 சர்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வொக்ஷொல் வீதியில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான 02 களஞ்சியங்கள் போட்டி விலைமனு அழைக்கப்படாமல் 2005 ஆண்டின் போது 30 வருடங்களுக்காக ரூபா 105,000 இற்கான மாதாந்த குத்தகைத் தொகைக்கு தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இந்த குத்தகை உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த குத்தகை செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் அதிகரிப்பு ரூபா 95,000 வீதம் 49 தவணைகளுக்காக ரூபா 4,655,000 தொகை மற்றும் ரூபா 175,000 வீதம் 14 மாதாந்த தவணைகளுக்காக ரூபா 2,450,000 தொகை குத்தகைக்கு கொடுக்கப்பட்ட 2005 திசெம்பர் முதல் 2011 பெப்ரவரி வரை குத்தகை அதிகரிப்பின் கூட்டுப் பெறுமதி ரூபா 7,105,000 தொகை அறவீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.<br>முதலாவது குத்தகை உடன்படிக்கை முடிவடைவதற்கு | வொக்ஷொல் வீதியில் அமைந்துள்ள இரண்டு களஞ்சியங்கள் நிலோனா லங்கா தனியார் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தக் கட்டிடங்கள் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக போட்டி விலைமனு கோருதல் தொடர்பான தகவல்கள் கோப்புக்களில் காணப்படவில்லை. இந்த விடயத்துடன் தொடர்புபட்ட ஊழியர்களும் தற்போது சேவையில் காணப்படாமையால் இது தொடர்பாக கண்டறிவதற்காக இயலுமையொன்று காணப்படவில்லை. எவ்வாறாயினும் உங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 2005 முதல் 2011 வரையான காலப் பகுதிக்கான நிலுவைக் குத்தகை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.<br>2011 ஆண்டில் கையொப்பமிடப்பட்டிருந்த குத்தகை உடன்படிக்கை பிரகாரம் மதிப்பீட்டின் மீது குத்தகை தொகையை திருத்துவதற்கு முடியாமல் போனமையால் இந்த நட்டம் சபைக்கு ஏற்பட்டிருந்ததென ஏற்றுக்கொள்வதுடன், புதிய உடன்படிக்கையொன்று கையொப்பமிடுவதற்காக | குத்தகை உடன்படிக்கை ஒன்று நடைமுறையில் இருக்கையில் குத்தகைதாரரிற்கு நன்மைதரும் வகையில் புதிய குத்தகை உடன்படிக்கை ஏற்படுத்த காரணமான விடயங்களை கண்டறிந்து சபைக்கு ஏற்படுத்தியுள்ள நட்டத்தை, பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

முன்னர் மீண்டும் அந்த குத்தகைதாரருடன் 2011 மார்ச் மாதத்தில் ரூபா 105,000 இற்கான மாதாந்த குத்தகை பெறுமதியை செலுத்துவதற்கு மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாக்க கொண்டு மாதாந்த குத்தகை வாடகை வழங்குதல் என்ற பிரிவை அகற்றி 30 வருடங்களுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கு உடன்படிக்கைக்கு அணுகியிருந்தது.

இரண்டாவது குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் குத்தகை அறவீடு செய்தல் என்ற நிபந்தனை அகற்றப்பட்டிருந்தால் 2011 மார்ச் முதல் மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதியின் அதிகரித்தல் ரூபா 119,000 வீதம் 58 மாதாந்த தவணைகளுக்காக ரூபா 6,902,000 தொகை மற்றும் ரூபா 353,000 தொகை வீதம் 36 மாதாந்த தவணைகளுக்காக ரூபா 12,708,000 தொகையாக மற்றும் ரூபா 438,000 தொகை வீதம் 60 மாதாந்த தவணைகளுக்காக ரூபா 26,280,000 தொகையாக கூட்டுத்தொகை ரூபா 45,890,000 தொகை 2011 மார்ச் முதல் 2023 திசெம்பர் வரை மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய குத்தகை வருமானம் ஒன்றினை சபை இழந்திருந்தது.

கலந்துரையாடப்பட்ட போதிலும், இலையபெரும தரப்பினருடன் காணப்பட்ட வழக்குக்காக வழங்கியிருந்த வழக்குத் தீர்ப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்தக் காணியில் தொடர்மாடி கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படாமை இதற்கு பாதகமாக இருந்தது.